மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: தகவலுக்கு நன்றி, அது பற்றி மின் வாரியம் பரிசீலிக்கும்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார பற்றாக்குறை நாடெங்கும் இருந்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நீர்வீழ்ச்சிகள் எங்கெங்கு உள்ளனவோ அந்த இடங்களிலெல்லாம் மின்சார உற்பத்தி செய்ய-குறிப்பாக குற்றாலம் போன்ற இடங்களில் மின்சார உற்பத்தி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குற்றாலத்தில் மின் உற்பத்தி செய்தால், குளிக்க முடியாது.

பெரியார் மாவட்டம் சங்கராண்டான் பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

* வினா எண். 533—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சங்கராண்டான் பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு ரூ 25 லட்சங்கள். இந்நிலைய வேலை முடிவடைந்து சாதனை வெள்ளோட்டம் (Trial Run) நடத்த ஏற்பாடாகியுள்ளது. அதன் பின் கூடிய சீக்கிரம் செயல் படுத்தப் படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டன் சத்திரத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை தான், பெரியார் மாவட்டத்தில் உள்ள சங்கராண்டான் பாளையத்தில் கொண்டு வருவதற்கான செயல்கள் மேற்கொள்ளப் படுவதாக உள்ளது. ஆகவே, அதை எடுக்காமல் தனியாக சங்கராண்டான் பாளையத்தில் மட்டும் ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெளிவாக திட்டவட்டமாக சொல்லிவிட்டேன்—அது வந்துவிட்டது. 25 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் தொடங்கயிருக்கிறது என்று

1982 மார்ச் 18]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய வெப்ப சக்தி மூலம் குளிரூட்டும் சாதனங்களை இயங்கச் செய்ய முடியும் என்று சமீபத்தில் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. ஆகவே, அதைப் பயன்படுத்தி குளிரூட்டும் நிலையங்களை, ஒவ்வொரு கிராமத்திலும் அமைப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா? பரீட்சார்த்தமாக ஏதாவது ஒரு இடத்தில் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சி அரசினிடத்திலே எதுவும் இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராண்டாம் பாளையத்தில் இருப்பது போன்ற குளிரூட்டும் நிலையம் ஒன்று சத்திய மங்கலத்தில் ஆரம்பித்து வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எப்பொழுது முடிக்கப்படும் எப்பொழுது வேலை துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அது விரைவில் முடிக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பால் குளிரூட்டும் நிலையம் இங்கே வெகு சீக்கிரத்தில் துவங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப்பால் குளிரூட்டும் நிலையத்தின் மூலமாக எத்தனை கிராமங்களில் எத்தனை பால் உற்பத்தியாளர்களுக்கு பயன் கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தற்போது சங்கராண்டாம் பாளையத்திலும், அதனைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலும் 40 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அதன் மூலம் 4,000 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. புதியதாக இந்த நிலையத்தை ஏற்பாடு செய்திருக்கிற காரணத்தால் மேலும் 50 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க முயன்றுக் கொண்டிருக்கிறோம். விரைவிலே 10,000 லிட்டர் பால் சேகரிக்க முடியும் என்று நம்பப்படுகிறது. இதனுடைய கொள்முதல் திறன் 30,000 லிட்டர் என்ற அளவில் அமைத்திருக்கிறோம்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பால் குளிரூட்டும் நிலையங்கள் இந்த ஆண்டு எங்கெங்கே தொடங்கப்பட இருக்கிறது இதுபோன்று நெல்லை மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில், ஒரு நிலையத்தை துவங்க அரசு ஆலோசிக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாளை அது குறித்து அறிவிக்கப்படும்.

திரு. கா. கோ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராண்டான் பாளையத்தில் அமைக்கப்படும் குளிரூட்டும் நிலையத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு, குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண். 534—செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எங்கு, எப்போது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தற்பொழுது இல்லை.

(ஆ) எழவில்லை.

(முற்பகல் 9.10)

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இக்கேள்வியினைப் பரிசீலனை செய்தாவது மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடத்தை அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் ஒரு கால்நடைத் தீவனத் தொழிற்சாலையும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரில் ஒரு கால்நடைத்தீவன தொழிற்சாலையும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டாவது பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் மதுரையில் 81 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கால்நடைத் தீவனத் தொழிற்சாலை அமைக்க அரசு திட்டமிட்டிருக்கின்றது. இது முடிந்த பிறகு தேவை என்றால் சேலத்தில் தொடங்கப்படும்.